பக்கங்கள் 13+3

# மாலை முரசு

## குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை!



கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றுக்கு அருகில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 25 வெள்ளிக்கிழமை 07.02.2025 | அதிர்வு 190

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







இறுதி நிகழ்வில் கட்டிய பனர் தொடர்பில்

# மாவையின் மகனிடம் பொலிஸ் விசாரணை



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதனிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

மாவை சேனாதிராஜாவின் மறைவின் பின்னராக அவரின் மறைவுக்குக் காரணமானவர்கள் எனக் கூறி தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவைச் சேர்ந்த 19 பேர் மீது கட்சியின் ஒரு சிலர் குற்றஞ்சாட்டி வந்திருந்தனர். 03

# மார்ச் 14, 15 ஆம் திகதிகளில் கச்சதீவில் பெருந்திருவிழா

## 9 ஆயிரம் பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்ப்பு

## யாழ். மாவட்ட செயலகத்தில் முன்னாயத்தக் கூட்டம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

கச்சதீவு திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் இடம்பெறும் எனவும், திருவிழாவுக்கான முன்னாயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். 03



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# யாழில் ஆலயங்களில் அதிக ஒலி எழுப்பப்பட்டால் சட்ட நடவடிக்கை

## மாவட்ட செயலர் பிரதீபன் எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிக சத்தங்களுடன் ஒலிபெருக்கிகளை ஒலிக்க விடும் ஆலயங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று மாவட்ட செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துக் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஆலயங்கள் மற்றும் வேறு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளால் அசௌகரியங்கள் ஏற்படுவதாக எமக்குத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

அதனால் ஆலயங்களில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும்போது, மாணவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக இரவு வேளைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த ஒலிபெருக்கி மூலம் இடையூறு ஏற்படுவதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஆகவே, இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இது குறித்து எழுத்து மூலம் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளோம்.

இவ்வாறு அசௌகரியங்கள் ஏற்படும் பட்சத்தில், அது தொடர்பில் முறைப்பாடுகளைப் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்தால், பிரதேச செயலர்கள் உடனடியாகப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்து அந்த ஒலியின் அளவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்." – என்றார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஆலயத் திருவிழாக் காலங்கள் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம்

நுவரெலியா, பீட்ரோ தோட்டத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



நேற்று இரவு 11 மணியளவில் இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான சிங்காரம் சந்திரமோகன் என்பவரே பீட்ரோ தமிழ் மகா வித்தியாலயத்தின் அருகில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி பஸ் சாரதி ஒருவர் கொலை

பதுளை நகரில் உள்ள சேனா நாயக்கபிட்டிய பிரதேசத்தில் கத்திக்குத்துக்கு இலக்காகி தனியார் பஸ் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பெலிஹுலோயா, பம்பஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே உயிரிழந்தவர் ஆவார்.

பஸ் சாரதி சேனாநாயக்கபிட்டிய பிரதேசத்தில் பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தபோது கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

படுகாயமடைந்த பஸ் சாரதி, வீதியில் வீழ்ந்து கிடந்த நிலையில், பிரதேசவாசிகளின் உதவியுடன் அம்புலன்ஸ் மூலம் பதுளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வது தொடர்பில் பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசியக்கொடியை அவமதித்த

# யாழ். பல்கலை மாணவர்களை உடனடியாகக் கைது செய்யுங்கள்

## சரத் வீரசேகர வலியுறுத்து



இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தேசியக் கொடியைக் கீழிறக்கிக் கறுப்புக் கொடியை ஏற்றியவர்கள் கைது செய்யப்பட வேண்டும் எனவும், அவர்களுக்குப் புலிகள் அமைப்புடன் தொடர்புள்ளதா என்பது பற்றி விசாரிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடமும் விளக்கம் கோரப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

“இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தேசியக் கொடி இறக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கறுப்புப் கொடி ஏற்றப்பட்டுள்ளது. தமிழ் நாளிதழ்களில் இது தொடர்பான செய்தி முதல் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

சுதந்திர தினத்தன்று தேசியக்கொடி ஏற்றப்பட வேண்டிய பல்கலைக்கழகத்தின் பிரதான கம்பத்தில் இருந்த கொடியே கீழ் இறக்கப்பட்டு, கறுப்புக் கொடி ஏற்றப்பட்டுள்ளது.

போரில் இருந்து இந்த நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த இராணுவத்தை அவமதிக்கும் வகையிலேயே இவ்வாறு செயற்பட்டுள்ளனர்.

எனவே, இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

இதற்கு இடமளித்தமை குறித்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் குழாமும் பொறுப்புக்கூற வேண்டும். இது தொடர்பில் அவர்களிடம் விளக்கம் கோரப்பட வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகமும் மக்கள் வரிப்பணத்தில்தான் இயங்குகின்றது. எனவே, தேசியக்கொடி அவமதிக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும். இந்தச் செயலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யுமாறு கோருகின்றோம்.

சுதந்திர தினத்துக்கு முன்னதாக ஜனாதிபதி யாழ். சென்றார், மக்களுடன் கலந்துரையாடினார். இனவாதத்தைத் தூண்டுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெளிவாக அறிவித்திருந்தார். எனவே, தேசியக் கொடியை அவமதித்து, தென்னிலங்கையில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக முதலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எமது நாட்டின் தேசியக்கொடியை ஏற்க மறுப்பவர்களைத் தேசத்துரோகிகளாகவே கருத வேண்டும். இவர்களுக்குப் புலிகள் அமைப்புடன் தொடர்புள்ளதா என்பது பற்றி புலனாய்வுப் பிரிவு ஆராய வேண்டும்.” - என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மார்ச்...**

கச்சதீவு திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரி நாகராஜா, முப்படைகளின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் மாவட்ட செயலர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது,

“திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. குறிப்பாக குடிதண்ணீர், மலசலகூடம், சுகாதார வசதிகள், பஸ் சேவைகள் மற்றும் படகு சேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட அதிகாரிகள் தயாராகியுள்ளனர்.

விசேட பஸ் சேவையை முன்னெடுக்க இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுவது தொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, படகு சேவையில் ஈடுபடவுள்ள படகுகளின் தரம் தொடர்பில் கடற்படையினர் ஆய்வுகளை மேற்கொண்டு அதற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான ஒரு வழி கடற்போக்குவரத்துக் கட்டணமாக 1000 ரூபாவும், குறிகாட்டுவன் துறைமுகத்தில் இருந்து 1300 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவுக்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை இந்தியாவில் இருந்து 4 ஆயிரம் யாத்திரிகர்களும், இலங்கையில் இருந்து 4 ஆயிரம் யாத்திரிகர்களும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இரண்டு நாடுகளினதும் அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் என ஆயிரம் பேருமாக சுமார் 9 ஆயிரம் பேர் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை பெருந்திருவிழாவுக்கு வருகை தரவுள்ளவர்கள் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி எதுவித இடையூறுகளும் இன்றி கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.” - என்றார்.

---

**மாவையின்...**

மாவை சேனாதிராஜா வீட்டில் தவறி வீழ்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பலனில்லாமல் உயிரிழந்த நிலையில் அவரின் மறைவுக்கு மன அழுத்தமே காரணம் என்பதாகக் குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டது.

அதிலும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் மாவை சேனாதிராஜாவை ஆதரிக்காத 19 உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் மரணச் சடங்குக்கு வரக் கூடாது என்றவாறாக பெயர் விவரங்களைக் குறிப்பிட்டு சமூக வலைத்தளங்களில் திட்டமிட்டு தகவல்கள் பரப்பப்பட்டிருந்தன.

இந்நிலையில் மாவை சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வில் மேற்படி 19 பேரின் பெயர் விவரங்கள் படங்களுடன் பனர் அடித்து காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இது கட்சிக்குள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்து. இந்த விவகாரம் கட்சிக் கூட்டத்தில் பெரும் பூதாரமாகும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான நிலைமையில்தான் இந்தப் பனர் அடித்தது மற்றும் கட்சியின் சக உறுப்பினர்களுக்கு எதிரான பிரசாரங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் மறைந்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மகனிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவத்தில் யார் யாருக்குத் தொடர்பு இருக்கின்றது என்ற கோணத்தில் பெலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

**குடும்பஸ்தர்...**

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

35 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்மைகள் வெளிவருமா?

சுமார் 270 பேரின் உயிர்களைக் காவு கொண்டு, குறைந்தது ஐந்நூறு பேரைப் படுகாயப்படுத்தி, அவர்களில் பெரும் எண்ணிக்கையானோரை அங்கவீனர்களாக்கிய ஈஸ்டர் ஞாயிறு தொடர் வெடிகுண்டுத் தாக்குதல் நடந்து எழுத்தாழ ஆறு ஆண்டுகளாகின்றன. ஆயினும் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் எவரும் வலையில் சிக்கவில்லை. அதன் மர்மம் நீடிக்கின்றது.

ஆறு ஆண்டுகள் கடக்கும் நிலையில் இப்போதுதான் - தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசு அதிகாரத்துக்கு வந்த பின்னர்தான் - இந்தப் பேரழிவுத் தாக்குதலின் மர்மங்கள் தொடர்பான விசாரணை நீதி, நேர்மையான. ஒழுங்கு முறையான வழியில் முன்னெடுக்கப்படுவதாக இக்குண்டுத் தாக்குதலில் பெரிதும் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் திருச்சபை ஓரளவு திருப்தி தெரிவிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தக் குண்டுத் தாக்குதல்களை நடத்திய சதிகாரர்களுக்கு அச்சமயத்தில் ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பியின் படுகொலை வழக்குத் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் சிறையில் இருந்தபடியே உதவியும் ஒத்தாசையும் வழங்கினார் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

இது தொடர்பாக அக்காலகட்டத்தில் பிள்ளையானின் இணைப்புச் செயலாளராகச் செயற்பட்ட அஸாத் மௌலானா என்பவர் சுவிட்ஸர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரிய நிலையில், அங்கிருந்தபடி ஜெனிவாவில் வழங்கிய வாக்குமூலமும் 'சனல் - 4' தொலைக்காட்சி மூலம் வழங்கிய பேட்டியும் இப்போது பரபரப்பு ஆதாரங்களாகி விசாரணைகளை முடுக்கி விட்டிருக்கின்றன.

இந்த விடயத்தில் தாக்குதல் நடத்திய சூத்திரதாரிகளுக்குப் பாதுகாப்புத் தரப்பின் ஒத்துழைப்பை பிள்ளையானே பெற்றுக் கொடுத்தார் என்று கூறப்படுகின்றது.

இந்த விசாரணைகள் துரிதமடைந்திருக்கின்ற பின்னணியில், முன்னர் நாட்டின் புலனாய்வுத் துறையில் உயர் மட்டத்தில் பதவியில் இருந்த பல அதிகாரிகள் நாட்டை விட்டுப் பயணம் செய்வதற்கு வெளியில் அறிவிக்கப்படாத தடை விதிக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தகவல் வெளியிட்டு இருக்கின்றனர். சில ஊடகங்கள் இந்த விடயத்தை வெளிப்படுத்தி உள்ளன.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு வவுணதீவில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகொலை செய்யப்பட்டு அவர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் பறித்தெடுத்துச் செல்லப்பட்டன. அந்த துப்பாக்கிகளை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடத்திய முஸ்லிம் தீவிரவாதிகள் பின்னர் பயன்படுத்தினர் எனக் கண்டறியப்பட்டது.

ஆனால் வவுணதீவில் இரண்டு கான்ஸ்டபிள்களைக் கொன்று இயந்திரத் துப்பாக்கிகளை சூறையாடியவர்கள் முன்னாள் விடுதலைப் புலிகளே என்று தவறான தகவல்களை வேண்டுமென்றே திட்டமிட்டு அப்போதைய புலனாய்வுத் தரப்புகள் விதைத்து, அந்த விடயம் தொடர்பான விசாரணை முஸ்லிம் தீவிரவாதிகள் பக்கம் திரும்பாமல் காப்பாற்றிக் கொண்டனர் என்றும், அந்தப் பாதுகாப்பை வைத்து மேற்படி ஈஸ்டர் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கின்றது என்றும் கூறப்படுகிறது.

அப்படி வேண்டுமென்றே நாட்டின் புலனாய்வுத் துறையை தவறான திசைக்குத் திருப்பும் வேலையை புலனாய்வு அதிகாரிகள் திட்டமிட்டு செய்யாமல் இருந்திருந்தால், கவனம் ஆரம்பத்திலேயே முஸ்லிம் தீவிரவாதிகள் பக்கம் திரும்பி, உண்மை கண்டுபிடிக்கப்பட்டு, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் பேரழிவு தவிர்க்கப்பட்டிருக்கும் என்று புலனாய்வு அதிகாரிகள் இப்போது கூறுகிறார்கள்.

இந்த விடயத்தில் புதிய அரசின் விசாரணை அணுகுமுறை பிள்ளையான் தரப்பினருக்கு மட்டுமல்லாமல், முன்னாள் புலனாய்வு அதிகாரிகள் பலருக்கும் கடும் நெருக்கடியை தரப் போகின்றது என்பது நிச்சயம்.





# திருக்கோவில் வலய பொங்கல் விழா!

( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் வலய வருடாந்த தைப்பொங்கல் விழா வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமார் தலைமையில் இன்று (07) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் வழங்கினார்.

பிரதம அதிதியாகத் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் கலந்து கொண்டார். வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அபிவிருத்தி உத்தியோத்தர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், எனைய பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.










# சாய்ந்தமருது சுகாதார அதிகாரி அலுவலகத்தில் ‘கிளீன் ஶ்ரீலங்கா’

(நூருல் ஹுதா உமர்)

‘கிளீன் ஶ்ரீலங்கா’ வேலை திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைத் தூய்மைப்படுத்தும் வேலை திட்டம் இன்று (07) இடம்பெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சிரமதான நிகழ்வில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல். ஜரீன் உட்பட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அலுவலக வளாகம் முழுமையாகத் தூய்மைப்படுத்தப்பட்டது. அலுவலக பின்புற பகுதியில் நிலையான சுகாதாரம் மற்றும் சுத்தம் உறுதி செய்யப்பட்டது.

அலுவலக சுவரில் இருந்து கழற்றப்பட்ட பழைய பெயர் பலகை மீண்டும் புதுப் பொலிவுடன் அலுவலக மதிலில் பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது!

(றிபாஸ்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்படி ஊழல் ஒழிப்புப் பிரிவுக்குப் பொறுப்பான உப பொலிஸ் பரிசோதகர் கே.எல். எம்.முஸ்தபா தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 110 மில்லி கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் இருந்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட ஒருவரிடம் இருந்து 1050 மில்லி கிராம் கஞ்சாவும், மற்றைய நபரிடம் இருந்து 500 மில்லி கிராம் கஞ்சாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை (07)ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 21 ஆம் திகதிவரை அவர்களை விளக்க மறிலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிய விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# முன்பள்ளி ஆசிரியர் தொழிற்சங்கம் அமைய வேண்டியது அவசியமானது!

## இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தினுடைய காப்பாளர் தெரிவிப்பு

(த.சுபேசன்)

முன்பள்ளி ஆசிரியர்கள் தொழிற் சங்கம் அமைப்பது அவர்களுடைய உரிமைகளை வென்றெடுக்க வழி வகுக்கும் என்று இலங்கை கல்வி அபி விருத்திக் குழுமத்தினுடைய காப்பாளர் ந.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வவுனியாவில் இடம் பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தமர்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத் துத் தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர்களுடைய சம்பளம் தொடர்பாகப் பலரும் பேசி வருகின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நலன்களை பெற்றுக் கொடுக்கும் விட யத்தில் வடமாகாண கல்வியலாளர்கள் பலரும் பக்கபலமாக இருப்பதில்லை. அவர்களுடைய ஆதரவு இருந்தால் கல்வி அபிவிருத்திக் குழுமம் ஊடாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விரைவாக



ஏதேனும் செய்ய முடியும்.

முன்பள்ளிகள் பல திணைக்களங் களிடம் சிக்குண்டுள்ளன. இவ்வாறான பிரச்சினைகளை அணுக மற்றும் ஆசிரி யர்களின் சம்பள உயர்வு விடயம் தொடர் பாக தீர்வு காண முன்பள்ளி ஆசிரி யர்கள் தொழிற்சங்கம் அமைப்பது சிறந்தது.

தொழிற்சங்கம் அமைக்கும் பட்சத் தில் கல்வி அபிவிருத்திக் குழுமம் அதற்கு பக்கபலமாக இருக்கும்.

அத்துடன் கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் நிதிப் பங்களிப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 60 முன்பள்ளி ஆசிரியர்களும், கிளிநொச்சி வளாகத்தில் 60 ஆசிரியர்களும், வவு னியா பல்கலைக்கழகத்தில் 40 ஆசி ரியர்களும் முன்பள்ளி டிப்ளோமாவை பயின்று வருகின்றனர்.

அடுத்த வருடமும் கல்வி அபிவிருத் திக் கழகத்தின் பங்களிப்போடு பல் கலைக் கழகங்களில் இந்த டிப்ளோமா கற்கைநெறி தொடரும். எனவே முன் பள்ளி ஆசிரியர்கள் குறித்த பல் கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்து பயனடைய வேண்டும்.

தற்போதைய அரசும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை கொடுக் கின்றது. ஆனால் அவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களுடைய சம்பள விடயத்தை எப்போது அணுகுவார்கள் என்று தெரிய வில்லை. அதனால் கல்வி அபிவிருத்திக் குழுமம் அது சார்ந்து செயற்படுகின்றது.- என்றார்.



# பஸ்ஸில் மோதுண்டு உயிரிழந்த யாசகர்!

(முஹம்மட் றிஸ்னாத்)

கொழும்பு கோட்டை யோர்க் வீதியில் பாணந்துறை – கொழும்பு பயணிக்கும் பஸ் ஒன்று யாசகர் ஒருவரை மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

அந்த வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வேளை பஸ் மோதியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைக ளைக் கொழும்பு கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# கிழக்கு மாகாண ஆளுநரின் நேரடி நடமாடும் சேவை அம்பாறையில்!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவால் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேரடியாக நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

பொது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை (06) இந்தச் சேவை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம, மேலதிக மாவட்ட அரச அதிபர் சிவ.ஜெகராஜன், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் மற்றும் பிற பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பொது மக்களது பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து தீர்வு காணப்பட்டது.



பொறுப்பான அதிகாரிகளிடம் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்ட அதேவேளை ஆளுநர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோரிடமும் மக்கள் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.







# இராமகிருஷ்ண ஆலய மகா கும்பாபிஷேகமும் சிவானந்தா நலன்புரி நிலைய கிரியை ஆரம்பமும்!

(வி.ரி. சகாதேவராஜா)

நுவரெலியா கொட்டகலையில் இராமகிருஷ்ண ஆலய மகா கும்பாபிஷேகம் மற்றும் சிவானந்தா நலன்புரி நிலையத் திறப்பு விழாவுக்கான ஆரம்பக் கிரியைகள் இன்று (07) வெள்ளிக்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இலங்கை ராமகிருஷ்ண மிஷன் மலையகத்துக்கான முதலாவது கிளையை நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கொட்டகலையில் அமைத்திருக்கின்றது.

வரலாற்றில் முதல் தடவையாக மலையகத்தில் பகவான் ராமகிருஷ்ண ஆலயமும், சிவானந்த நலன்புரி நிலையமும் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

அதற்கான பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகியன.

பகவான் ராமகிருஷ்ண திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றுத் தொடர்ந்து சிவானந்தா நலன்புரி நிலையம் தொடர்ந்து திறந்து வைக்கப்பட வுள்ளது.



இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் சகல ஏற்பாடுகளையும் கவனித்துள்ளார். வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார்.

பிரதம அதிதியாக உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்களின் துணைத்தலைவர் ஸ்ரீ மத் சுவாமி சுஹிதானந்த ஜி மகராஜ் கலந்து கொள்வதற்கு இலங்கை வந்துள்ளார்.

அவருடன் இந்தியா காசி ராமகிருஷ்ண மடம் தலைவர் சுவாமி சர்வரூபானந்த ஜி மகாராஜும் மதுரை ராமகிருஷ்ண மடம் தலைவர் சுவாமி நித்யதீபானந்த ஜீ மகராஜும் வருகை தந்துள்ளனர்.

கும்பாபிஷேக கிரியைகளை சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு. வை.க .வைத்தீஸ்வரக் குருக்கள் நடத்தி வைக்கவுள்ளார்.

முன்னதாக நாளை மறுநாள் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொட்டகலை பிரதேசத்தில் மாபெரும் ஊர்வலம் கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் நடைபெறவுள்ளது.



# பனை அபிவிருத்திச் சபையால் பனங்கிழங்கு அல்வா தயாரிப்பு

(த.சுபேசன்)

பனை அபிவிருத்திச் சபையினரால் அண்மையில் புதிய உற்பத்தியாக பனங்கிழங்கு அல்வா தயாரிக்கப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் காரைநகர் உற்பத்தி நிலையத்தின் பொறுப்பாளர் சுதாகரனின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட பனங்கிழங்கு அல்வா சபைத் தலைவர் வி. சகா தேவன் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது பனை அபிவிருத்திச்சபை தலைவர் சகாதேவன் கருத்து தெரிவிக்கையில்,

பனை ஊடாக ஆயிரக்கணக்கான உற்பத்திகளை மேற்கொள்ள முடியும். புதிய புதிய பனை சார் உற்பத்திகளை உற்பத்தியாளர்கள் முன்னெடுக்கும் விதமாக எமது சபையின் செயற்பாடுகள் அமையும் என்று தெரிவித்திருந்தார்.

# கண்ணப்பன் அன்பை கணக்கிடல் அரிது !

(நாளை கண்ணப்பர் குருபூசை )

வெட்டு கொல்லு வேட்டை ஆடு
கொன்ற விலங்கை சுவைத்து நில்லு
அம்பும் வில்லும் கத்தியும் ரத்தமும்
அங்கு அவர்க்கு நிரந்தர மாகும்

காடே வீடு கறியோ விலங்கு
நாடோ அறியார் நற்செயல் விளங்கார்
ஏடும் அறியார் எழுத்தும் அறியார்
வாழும் காடே வரமாய் நினைப்பார்

வேடர் நினைப்பே வேட்டை ஆகும்
விலங்கை எண்ணியே கனவும் காண்பார்
உடலும் உரமே உளமும் உரமே
உயிரைக் கொல்வது பழியெனத் தெரியார்

பிடித்ததைக் கொல்லுவார் பிடித்ததைத் தின்னுவார்
குடிப்பார் வெறிப்பார் கூத்தும் ஆடுவார்
தத்துவம் அறியார் சமயமும் அறியார்
நித்தமும் ரத்தமும் தசையுமே அறிவார்

அவர்க்குத் தலைவன் நாகன் என்பான்
அவனே அரசன் அவனே அனைத்தும்
வாரிசு இல்லா வாடியே நின்றான்
வடிவுடை முருகனை நாடியே நின்றான்

அவனும் மனைவியும் அனுதினம் வேண்டினர்
முருகனும் இரங்கி முத்தாய் அருளினார்
பிறந்த குழந்தை திண்மையாய் இருந்ததால்
திண்ணன் பெயரென மொழிந்தான் நாகன்

திண்ணன் வளர்ந்தான் நாகன் மகிழ்ந்தான்
வேடர் குலத்து விளக்கென வியந்தான்
தனக்குப் பின்னே தலைவன் வந்தான்
என்றே எண்ணியே இன்பம் எய்தினான்

கன்னி வேட்டைக்கு மைந்தனை அனுப்பினான்
நாணனும் காடனும் துணையாய் சென்றனர்
வேடர் கூட்டமும் கூடவே சென்றது
விலங்குகள் யாவுமே வெருண்டுமே ஓடின

பன்றி ஒன்று ஏய்த்துமே நின்றது
திண்ணனும் நண்பரும் துரத்தியே சென்றனர்
முடிவில் பன்றியை கொன்றான் திண்ணனும்
களைப்பால் திண்ணன் நீரைக் கேட்டான்

தாகம் தீர்க்க ஆற்றினை அடைந்தனர்
பொன்முகலி ஆறு தாகம் தீர்த்தது
நண்பனாம் நாணன் மலைபற்றிச் சொன்னான்
சொன்னதும் திண்ணன் துடிப்புடன் எழுந்தான்

திண்ணன் கோவிலை மலையில் கண்டான்
தன்னை மறந்து அங்குமே சென்றான்
கண்டான் அங்கே காளத்தி நாதரை
நின்றான் சிலையாய் அனைத்தும் மறந்தான்

பசியும் தாகமும் பஞ்சாய்ப் பறந்தது
பாரம் குறைந்ததாய் திண்ணன் உணர்ந்தான்
நாணன் அழைத்தான் மறுத்தான் திண்ணன்
காளத்தி நாதரின் காந்தத்தால் கவர்ந்தான்

தனியே இருக்கிறார் பசிக்கும் என்றான்
பன்றியின் இறைச்சி நினைவில் வந்தது
கடித்து நல்லதை எடுத்து வந்தான்
படைத்து வைத்து புசித்திடச் சொன்னான்

தந்தையை மறந்தான் தாயை மறந்தான்
சொந்தம் மறந்தான் சுகத்தை மறந்தான்
காளத்தி நாதரைக் கட்டியே கொண்டான்
காளத்தி நாதரே கண்ணில் தெரிந்தார்

வாயால் நீரை மொண்டுமே சென்றான்
மொண்ட நீரை அபிசேகம் செய்தான்
இறைச்சியைப் படைத்தான் இலைகளை வைத்தான்
தலைக்கனம் இன்றியே அனைத்தும் செய்தான்

கோயிற் பூசகர் கண்டார் இறைச்சியை
பதறினார் பயந்தார் அபசாரம் என்றார்
காளத்தி நாதரை வேண்டியே நின்றார்
கலங்கிய மனத்துடன் சுத்தம் செய்தார்

பூசகர் கனவில் இறைவன் தோன்றினார்
காலையில் அதிசயம் காண்பாய் என்றார்
மறைவாய் இருந்து பார்ப்பாய் என்று
மறைந்தார் இறைவன் கனவில் இருந்து

காலையில் பூசகர் வந்தார் மலைக்கு
மறைவாய் இருந்து பார்த்துமே நின்றார்
வேடன் திண்ணன் வந்தான் அங்கு
இரத்தம் வழிந்திட கண்ணைக் கண்டான்

பதறினான் துடித்தான் பற்களைக் கடித்தான்
கண்ணுக்கு மருந்து கண்ணென எண்ணினான்
ஈட்டியை எடுத்தான் தன்கண்ணைப் பிடிங்கினான்
பிடிங்கிய கண்ணை அப்பியே நின்றான்

அப்பிய உடனே ஆனந்தம் அடைந்தான்
ஆனந்தம் உடனே அடங்கியே போனது
அடுத்த கண்ணிலும் இரத்தம் வடிந்தது
திண்ணம் மனமே துள்ளிக் குதித்தது

கண்டேன் மருந்தை என்றே சொல்லி
அடுத்த கண்ணையும் பிடுங்க முனைந்தான்
நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப
அசரீரீ ஒலித்தது பூசகர் அதிர்ந்தார்

கண்ணைப் பிடிங்கி கண்ணப்பன் ஆகினான்
நடக்குமா என்று யாவரும் விழிக்கிறோம்
அன்பின் உயர்வாய் அவனும் நின்றான்
ஆண்டவன் அருளுக்கு ஆளாகி நின்றான்

எப்படி இருந்தவன் எப்படி மாறினான்
இரக்கம் அறியான் இரங்கியே நின்றான்
உருக்கம் அறியான் உருகியே நின்றான்
அன்பின் உருவாய் கண்ணப்பன் ஆகினான்

வேடன் முரடன் மென்மை ஆகினான்
மேதினி வியக்கும் செயலும் ஆற்றினான்
கண்ணப்பன் செயலை விளக்கிடல் இயலா
கடவுளின் அன்பில் கலந்தான் அவனும்

கண்ணப்பன் அன்பை கணக்கிடல் அரிது
கண்ணப்பன் நிலையோ உன்னத ஞானம்
தன்னை மறந்தான் தன்நாமம் இழந்தான்
தலைவனாம் இறைவனை மனமதில் கொண்டான்

**மகாதேவஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.



# ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளரையும் அரசு பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

**இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி துணைச் செயலாளர் நிதான்சன்**

**(வி.ரி.சகாதேவராஜா)**

கடந்தகால அரச ஆட்சிக் காலத்தில் நடந்த ஊடக அடக்குமுறைகள் இந்த ஆட்சியிலும் அவ்வப்போது தோன்றி மறைகின்றன. மிகவும் கொடூரமாகக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் விடயங்களில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை வழங்கிய அரசு அந்த விசாரணைகள் தொடர்பில் துரிதப்படுத்த வேண்டும்.மேலும் அவ்வாறான விடயத்தில் நழுவல் போக்கில் அரசு செயலாற்றல் ஆகாது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் வலியுறுத்தினார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகளிலும் பல சுயாதீன ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிக்க உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அடக்கு முறைகளை கடந்த ஆட்சியாளர்கள் போல் இந்த புதிய ஆட்சியாளர்களும் மேற்கொள்ளக் கூடாது.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் சுயாதீனத்துக்கு பங்கம் வராமல் பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்புடமையாகும்.- என்றார்.



# பாடசாலைகளில் மலசலகூடங்கள் அசுத்தமாகக் காணப்படுகின்றன!

**சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு**

**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் டெங்கு களத்தடுப்பு நடவடிக்கை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் நேற்று (06) முன்னெடுக்கப்பட்டது.

மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் அடங்கலான குழுவினர்கள் இப்பரிசீலனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பாடசாலைகளில் டெங்கு மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பரிசோதனையில் ஈடுபட்டதன் மூலம் மூன்று பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கீழ் உள்ள மூன்று பாடசாலைகளில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அங்கு உள்ள ஆண் மாணவர்களின் மலசலகூடம் மிகவும் அசுத்தமானதாகவும் மோசமானதாகவும் காணப்படுகின்றது. மேலும் டெங்கு நுளம்புகள், நுளம்புக் குடம்பிகளும் அதிகமாக இனம் காணப்பட்ட இடங்களாகவும் பாடசாலைகள் காணப்படுகின்றன என்றும் இதனால் அந்தப் பாடசாலைகளுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பாடசாலையின் சுகாதாரத்தைச் சீர் செய்வதற்கு மிகக் குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டது. அந்தக் குறுகிய காலத்திலும் டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்கள் அழிக்கப்படுதல் வேண்டும் என்றும் மலசலகூடங்களும் சீரமைக்கப்பட வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

மலசலகூடங்களைச் சிறப்பாகப் பேணாத பாடசாலைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் சூழலை பராமரிக்க களத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சுகாதார வைத்திய அதிகாரி இதன்போது தெரிவித்தார்.

# 2026 இல் தி.மு.க. வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும்: ஸ்டாலின் உறுதி

திருநெல்வேலியில் பா.ஜ.க, அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தமிழக முதல்வர் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்தனர்.

பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் பேசிய தமிழக முதல்வர் 2026 தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று உறுதிபட தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் மேலும் உரையாற்றுகையில்,

“பா.ஜ.க, அ.தி.மு.க. உள்ளிட்ட மாறுக்கட்சிகளில் இருந்து தி.மு.கவில் இணைந்திருப்போரை வரவேற்கிறேன். தி.மு.கவுக்கு வலுசேர்க்கும் வகையில் எங்களுடன் நீங்கள் இணைந்துள்ளீர்



கள். தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களுக்காக பணியாற்றும். திமுகவை அண்ணா தொடங்கியபோதே இதை உறுதிபட தெரிவித்திருக்கிறார்.

எனவே நாங்கள் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏழை, எளிய மக்களுக்காக, தமிழினத்துக்காக பாடுபடுவோம். தி.மு.க. தொடங்கியபோது தேர்தலில் போட்டியிட வேண்டுமா, வேண்டாமா என்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது. ஆனால் இப்போது சிலர் கட்சி தொடங்கியதுமே ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்றும் முதல்வராவோம் என்று தெரிவித்து வருகிறார்கள். இதெல்லாம் மக்களிடம் எடுபடாது. யார் எப்படிப்பட்டவர்கள் என்பது குறித்து மக்களுக்கு தெரியும்.

தேர்தலில் நிற்க வேண்டும் என்று முடிவு செய்து 1957 இல் தேர்தலில் திமுக போட்டியிட்டு 15 எம்.எல்.ஏக்கள் வெற்றி பெற்றனர். இவ்வாறு படிப்படியாக வளர்ந்து 6 ஆவது முறையாக ஆட்சியில் இருக்கிறோம். வரும் 2026 இல் 7ஆவது முறை வெற்றி பெற்று தி.மு.க. ஆட்சி அமைக்கும். இதை மக்கள் முடிவு செய்துவிட்டனர். அதற்காக தொண்டர்கள் பணியாற்றுகிறார்கள். கட்சியில் இணைந்தவர்களும் பணியாற்ற வேண்டும்.”

# நீதிமன்ற படியேறினால்தான் சீமானுக்கு நிதானம் வரும்

## உயர் நீதிமன்ற நீதிபதி கருத்து



வழக்கு விசாரணைக்கு ஆஜராக விலக்கு அளிக்க முடியாது எனவும் தொடர்ந்து நீதிமன்ற படியேறினால் தான் சீமானுக்கு நிதானம் வரும் என்றும் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்த அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமான், மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை இனத் துரோகி என்றும், தேசத் துரோகி என்றும் பேசி வன்முறையைத் தூண்டினார் என கஞ்சனூர் பொலிஸில் காங்கிரஸ் கட்சி சார்பில் புகார் அளிக்கப்பட்டது.

இந்த புகாரின் பேரில் சீமானுக்கு எதிராகப் பதியப்பட்ட வழக்கு விக்கிரவாண்டி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக் கோரியும், வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராக விலக்கு அளிக்கக் கோரியும், சென்னை உயர் நீதிமன்றத்தில் சீமான் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி பி.வேல்முருகன் முன்பாக நடந்தது. அப்போது நீதிபதி கூறுகையில்,

“வழக்கு தொடர்பான முதல் தகவல் அறிக்கை, இறுதி அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பார்க்கும்போது மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரம் உள்ளது. எனவே இந்த வழக்கில் இருந்து சீமானை விடுவிக்க முடியாது. மேலும், வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராவதில் இருந்தும் அவருக்கு விலக்கு அளிக்க முடியாது.

சீமான் அரசியல் தலைவர்கள் குறித்து பேசும்போது நிதானமாகப் பேச வேண்டும். அடுத்தவரை எரிச்சலூட்டும் விதமாக பேசுவதையும், தனிப்பட்ட நபர்களைத் தூண்டும் விதமாக கருத்து தெரிவிப்பதையும் அவர் வழக்கமாக வைத்துள்ளார். ஒவ்வொரு முறையும் இதேபோல பேசினால் வழக்குப்பதியத்தான் செய்வார்கள். கருத்து சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக எல்லை மீறக் கூடாது.

வழக்கு விசாரணைக்காக தொடர்ந்து அவர் நீதிமன்றப் படியேறினால்தான் அவருக்கு நிதானம் வரும். இது போன்ற கருத்துகளை பேசக்கூடாது என அவருக்கு அறிவுறுத்துங்கள்” என சீமான் தரப்பு வழக்கறிஞரிடம் கூறிய நீதிபதி பி.வேல்முருகன், சீமான் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

# விவசாயிகளின் வயிற்றில் அடித்திருக்கிறது தி.மு.க. அரசு: அண்ணாமலை கண்டனம்

தி.மு.க. ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் ஆகியும் பயிர் கடனை தள்ளுபடி செய்யாமல் விவசாயிகளை வஞ்சிப்பதாக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது, ஆட்சிக்கு வந்தவுடன், முதல் கையெழுத்து விவசாயக் கடன் தள்ளுபடி என்று மு.க.ஸ்டாலின் வாக்குறுதி கொடுத்தார். தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும், வாக்குறுதி எண் 33 இல் சிறு, குறு விவசாயிகளின் பயிர்க் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால்,



4 ஆண்டுகள் கடந்தும், இன்றுவரை, பயிர்க் கடனை ரத்து செய்யாமல், எளிய விவசாயிகளுக்குத் துரோகம் செய்து கொண்டிருக்கிறது தி.மு.க.

தி.மு.க. அரசின் சாதனையாக, ஆட்சிக்கு வந்து, கடந்த 07.05.2021 முதல், 31.12.2023 வரை, 35,852.48 கோடி ரூபா கூட்டுறவு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர்கள் கூறுகிறார்கள். கடந்த 4 ஆண்டுகளில், புயல், வெள்ளம் என, சிறு குறு விவசாயிகள் எதிர்கொண்ட பிரச்சினைகள் ஏராளம்.

அப்படி இருந்தும், கடந்த 31.03.2024 வரை நிலுவையில் இருக்கும் கூட்டுறவு பயிர்க் கடன் 19,008 கோடி ரூபா மட்டும்தான் எனில், இத்தனை கடினமான காலங்களிலும், சிறு குறு விவசாயிகள் தங்கள் கடனை முறையாகத் திரும்பச் செலுத்தி வருகிறார்கள் என்பதுதானே பொருள். தி.மு.கவின் வாக்குறுதியை நம்பி ஏமாந்துபோன விவசாயிகளின் வயிற்றில் அடித்திருக்கிறது தி.மு.க.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# மனித உரிமை பேரவையிலிருந்து விலகுவதாக இஸ்ரேல் அறிவித்தது





ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இருந்து இஸ்ரேல் விலகுவதாக அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு அமெரிக்க பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயத்தை அவர் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இருந்து விலகும் ஜனாதிபதி ட்ரம்பின் முடிவை இஸ்ரேல் வரவேற்கிறது. இந்த விவகாரத்தில் அமெரிக்காவுடன் இஸ்ரேலும் இணைந்து கொள்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் (UNHRC) இஸ்ரேல் பங்கேற்காது.

மனித உரிமைகளை மீறுபவர்களை ஆய்வுக்கு உட்படுத்தாமல் பாதுகாத்து அவர்களை ஒளிந்து கொள்ள அனுமதிப்பதன் மூலம், UNHRC மத்திய கிழக்கில் உள்ள ஒரே ஜனநாயகமான இஸ்ரேலை பேய்த்தனமாக சித்தரிக்கிறது.

இந்த அமைப்பு மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, ஒரு ஜனநாயக நாட்டைத் தாக்குவதிலும், யூத விரோதத்தைப் பரப்புவதிலும் கவனம் செலுத்தியுள்ளது. எங்களுக்கு எதிரான பாகுபாடு காட்டப்படுவது தெளிவாகத் தெரிகிறது.

UNHRC யில், இஸ்ரேல் மட்டுமே அதற்கென மட்டுமே உருவாக்கப்பட்ட தனி விதிகளை கொண்ட ஒரே நாடு. இஸ்ரேல் 100 க்கும் மேற்பட்ட கண்டனத் தீர்மானங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இது கவுன்சிலில் இதுவரை நிறைவேற்றப்பட்ட அனைத்து தீர்மானங்களிலும் 20 வீதத்துக்கும் அதிகமானவை. ஈரான், கியூபா, வட கொரியா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளுக்கு எதிரானதை விட அதிகம்.

இஸ்ரேல் இனி இந்த பாகுபாட்டை ஏற்றுக்கொள்ளாது.” என்று குறிப்பிட்டுள்ளார்.







# உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து வெளியேறும் ஆர்ஜென்டின அரசு

ஜேவியர் மிலி தலைமையிலான ஆர்ஜென்டின அரசாங்கம் உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து வெளியேறத் திட்டமிட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியில் சுகாதார முகாமைத்துவத்தில் காணப்பட்ட வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜனாபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து விலகுவதற்கான நடைமுறையை ஆரம்பிப்பதற்கான உத்தரவில் கையெழுத்திட்டு 2 வாரங்களில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# மொபைல் திருட்டு தொடர்பில் லண்டனில் 230 பேர் கைது!



மொபைல் திருடர்களை கட்டுப்படுத்தும் முயற்சியை லண்டன் பெருநகர பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இதனால், இங்கிலாந்தின் தலைநகரில் ஒரே வாரத்தில் திருடப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட மொபைல்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதேநேரம், இந்த திருட்டு தொடர்பில் 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லண்டன் முழுவதும் ஒரு வார ஒருங்கிணைந்த நடவடிக்கையின் போது, தலைநகரின் பொலிஸ் குறிப்பாக மொபைல் திருடர்களை குறிவைத்தது.

இது வெஸ்ட் எண்ட் மற்றும் வெஸ்ட்மின்ஸ்டர் போன்ற பகுதிகளில் கிட்டத்தட்ட 40 வீத திருட்டுக்கள் பதிவாகியுள்ளன.

கனடா முரசு
பக்கங்கள் 03
வெள்ளிக்கிழமை 07/02/2025

### ரொறன்ரோவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

ரொறன்ரோவில் மோஸ் பார்க்கில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

குயின் மற்றும் ப்ரோன் வீதிகளுக்கு அருகாமையில் 02▶



# கனடா - அமெரிக்கா உச்சிமாநாடு இன்று

டொராண்டோவில் கனடா - அமெரிக்க பொருளாதார உச்சிமாநாடு இன்று இடம்பெறுகின்றது

இந்த மாநாட்டின் போது, கனேடிய வர்த்தகம் மற்றும் வணிகத் தலைவர்கள், ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர்களுடன் இணைந்து, பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான உத்திகள், உள்நாட்டு வர்த்தக தடைகளை உடைத்தல் மற்றும் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துதல் பற்றி கவனம் செலுத்தப்படும் என்று கனேடிய பிரதமர் அலுவலகம் அறிவித்தது. 02▶

## ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்தும் கனடா



அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகின்றது.

குறிப்பாக எல்லை மற்றும் குற்ற அமுலாக்கத்தில் சலுகைகளுக்கு ஈடாக கனேடிய ஏற்றுமதிகள் மீது அதிகபடியான வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் அறிவித்திருந்த நிலையில் அதனை 30 நாள்களுக்கு தாமதப்படுத்துவதாக கடந்த திங்களன்று தெரிவித்தார்.

எவ்வாறு இருப்பினும் கனடாவின் 75 வீத ஏற்றுமதிகளும் அமெரிக்காவைச் சார்ந்துள்ளது என்பதால் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காகவும், அமெரிக்கா விதிக்கும் வரிகள் மற்றும் பொருளாதார பாதிப்புகளை எதிர்கொள்வதற்காகவும், வணிக மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களுடன் டொரொண்டோவில் ஒரு நாள் உச்சிமாநாட்டினை நடத்த இருப்பதாக அறிவித்துள்ளார்.

இந்த உச்சிமாநாட்டின் முக்கிய நோக்கங்கள்

1. உள்நாட்டு வணிக தடைகளை குறைத்தல்.
2. ஏற்றுமதி சந்தைகளை 03▶



# கனடாவுக்குள் நுழைய முயன்ற 15 பேர் கைது; ஒருவர் உயிரிழப்பு

அமெரிக்க எல்லையில் இருந்து கனடாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த சில வாரங்களில் மட்டும் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார். அதில் இருந்து தப்பிக்க சிலர் கனடாவுக்குள் நுழைகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கனடாவின் கடுங்குளிரைத் தாங்குவதற்கான துணிகள் இல்லாமல் பரிதாபமான நிலையில் இருந் தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குறித்த தனிநபர் தகவல்களை வெளியிட முடியாது என்று கனடிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாகக் குடியேரிகள் கனடாவுக்குள் நுழையலாம் என்பதால் அதிகாரிகள் எல்லைகளில் பாதுகாப்பு பணியை அதிகரித்துள்ளனர்.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருதரப்பு உறவுகள் மற்றும் ட்ரம்பின் கட்டண அச்சுறுத்தல் குறித்து ட்ரூடோவுக்கு ஆலோசனை வழங்கும் கனடா - அமெரிக்க உறவுகள் கவுன்சிலின் உறுப்பினர்களும் இதில் இடம்பெறுவார்கள்.

இந்த உச்சிமாநாட்டில் வணிகத் தலைவர்கள், தொழில்துறையினர், அரசு அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கனேடிய பிரதமர் அலுவலகம் இதில் பங்கேற்க தகுதிவாய்ந்தவர்களின் பட்டியலை வெளியிடவில்லை.

மேலும், இந்த உச்சிமாநாடு, அமெரிக்கா சார்ந்த பொருளாதாரத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கையை குறைத்து, கனடாவுக்கென தனி வளர்ச்சிப் பாதை உருவாக்கும் முயற்சியாக கருதப்படுகிறது.






## ரொறன்ரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவரின் உயிரை காக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்ட போதிலும் அது பலன் அளிக்கவில்லை என உயிர் காப்பு பணியாளர்களும் பொலிஸாரும் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு இலக்கான நபர் பற்றிய விவரங்களோ தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் பற்றிய விவரங்களோ வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் ரொறன்ரோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# போதை மருந்து கடத்துவோருக்கு கடும் தண்டனை விதிக்கப்படும்

போதை மருந்து கடத்துவோருக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும் என கனடா எதிர்க்கட்சித் தலைவர் பியே பொலியேவ் தெரிவித்துள்ளார்.

40 மில்லி கிராம் எடைக்கும் அதிகமான பென்டனைல் என்னும் போதை மருந்து வைத்திருப்போருக்கு ஆயுள் தண்டனை விதிக்க ஏற்பாடு செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொலைக் குற்றச் செயலுக்கு வழங்கும் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

20 முதல் 40 மில்லி கிராம் எடையுடைய போதைப் பொருள் கடத்துவோருக்கு அதிகபட்சமாக 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்த போதை மருந்தில் இரண்டு மில்லி கிராம் ஒருவரின் உயிரை பறிக்கப் போதுமானது என்றும் அவ் வளவு ஆபத்தானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





# இட்டோபிகொக் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் இட்டோபிகொக் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் மேலும் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

காயம் அடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், இருவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றும் உயிரிழந்தவரின் ஆள் அடையாள விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை

இளம் வயதினர் இருவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இட்டோபிகொக்கில் அமைந்துள்ள குடியிருப்பு ஒன்றில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.





## ஏற்றுமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரிவுபடுத்துதல்.

3. தொழில்துறைகளில் புதிய முதலீடுகளை ஈர்த்தல்.

4. நீண்ட அனுமதி செயல்முறைகளை சீர்செய்தல்

5. அலுமினியத்தை ஐரோப்பாவிற்கு திருப்பிவிடத் தீர்மானித்துள்ளமை

இதேவேளை, இந்த உச்சிமாநாட்டில் வணிகத் தலைவர்கள், தொழில்துறையினர், அரசு அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்ட போதிலும் கனேடிய பிரதமர் அலுவலகம் இதில் பங்கேற்க தகுதி வாய்ந்தவர்களின் பட்டியலை வெளியிடவில்லை.

இந்நிலையில், இந்த உச்சிமாநாடு, அமெரிக்கா சார்ந்த பொருளாதாரத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கையை குறைத்து, கனடாவுக்கென தனி வளர்ச்சிப் பாதை உருவாக்கும் முயற்சியாக கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.